# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2145 - 2019 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2019.10.11

*2145 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 216 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, நவெம்பர் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


215-B81567-353 (2019/10)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம்

(கொழும்பில் நடாத்தப்படும்) குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்

வழக்கு இல. : எச். சீ. (சிவில்) 66/ 19/சீஓ
தன்மை : கம்பனியை ஒடுக்குதல்
ஒழுங்கு விதிமுறை :
பெறுமதி : ரூபா

இரத்மலானை, கட்டுகுருந்துவத்த வீதி, இல. 24 கொண்ட இடத்தின் "லீடர் ஹோல்டின் (பிரைவேட்) லிமிடட்" பற்றிய விடயம் சம்பந்தமானது.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் பற்றிய விடயம்.

இரத்மலானை, கட்டுகுருந்துவத்த வீதி, இல. 24 கொண்ட இடத்தின் "லீடர் ஹோல்டின் (பிரைவேட்) லிமிட்டட்."

மனுதாரர்கள்.

கொழும்பில் நடாத்தப்படும் (குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்) மேல் மாகாண, மேல் நீதிமன்றத்தால் மேற்படி கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, மனுதாரரின் சார்பில் திருவாளர்கள் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம் நிறுவனத்தால், 2019, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மேற்படி நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனு 2019, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கென பணிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ ஆட்சேபிக்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரும் விசாரணையின்போது அந்த நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணியின் மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும், அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது, அப்பிரதி கொடுத்துதவப்படும் என்று இத்துடன் அறியத்தருகின்றது.

திருவாளர் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம்,
சட்டத்தரணிகள்,
47, அலெக்சாந்திரா பிளேஸ்,
கொழும்பு 07.

**குறிப்பு**.- மேற்படி மனு விசாரணை செய்யப்படும் போது நேரில் தோற்ற உத்தேசிக்கும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்காக தமது உத்தேசம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை திருவாளர் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலில் ஆளின் பெயரும், முகவரியும் அல்லது நிறுவனம் எனின் நிறுவனத்தின் பெயரும், முகவரியும் குறிப்பிட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிட்டு 2019, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின், மேற்படி திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

10-381

---

## குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் (கொழும்பில் நடாத்தப்படும்) மேல் மாகாண மேல் நீதிமன்றம்

வழக்கு இல. : எச். சீ. (சிவில்) 67/ 19/சீஓ
தன்மை : கம்பனியை ஒடுக்குதல்
ஒழுங்கு விதிமுறை :
பெறுமதி : ரூபா

இரத்மலானை, கட்டுகுருந்துவத்த வீதி, இல. 24 கொண்ட இடத்தின் "லீடர் பப்லிகேசன் (பிரைவேட்) லிமிடட்" பற்றிய விடயம் சம்பந்தமானது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம் பற்றிய விடயம்.

இரத்மலானை, கட்டுகுருந்துவத்த வீதி, இல. 24 கொண்ட இடத்தின் "லீடர் பப்லிகேசன் (பிரைவேட்) லிமிடட்".

மனுதாரர்கள்.

*கொழும்பில் நடாத்தப்படும் (குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தால் மேற்படி கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று மனுதாரரரின் சார்பில் திருவாளர் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம் நிறுவனத்தால் 2019, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மேற்படி நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவும், மேற்படி மனு 2019, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கென பணிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ ஆட்சேபிக்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் எவரும் விசாரணையின்போது அந்தநோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணியின் மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்நர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின் மீது அப்பிரதி கொடுத்துதவப்படும் என்று இத்துடன் அறியத்தருகின்றது.*

*திருவாளர் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம்,*
*சட்டத்தரணிகள்,*
*47, அலெக்சாந்திரா பிளேஸ்,*
*கொழும்பு 07.*

***குறிப்பு**.- மேற்படி மனு விசாரணை செய்யப்படும் போது நேரில் தோற்ற உத்தேசிக்கும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்காக தமத உத்தேசம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை திருவாளர் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலில் ஆளின் பெயரும், முகவரியும் அல்லது நிறுவனம் எனின் நிறுவனத்தின் பெயரும், முகவரியும் குறிப்பிட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிட்டு 2019, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் மேற்படி திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.*

*10-382*

---

## மேல் மாகாண உயர் நீதிமன்றம்

(வாணிப நியாயாதிக்கத்தை செயற்படுத்தும்) (கொழும்பில் நடாத்தப்படும்)
மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்

*வரையறுக்கப்பட்ட கமல் கேபிள் பிரைவேட் லிமிடெட், இல. 56, கண்டவேலா, ரத்மலானா, விடயத்தில்*

*வழக்கு இல. :*
*எச்சீ/சிவில்/64/19/சீஓ*
*வகை : முடிவுறுத்தல்*
*நடைமுறை : சாராம்சம்*
*பெறுமதி : ரூபா*
*203,444,801/24*

*மற்றும்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் முடிவுறுத்தப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில்,*

*ராஜகிரிய, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, இல. 100/1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும்.*

*ராஜகிரிய, நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தாபனத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஓஎல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனம்.*

*விண்ணப்பதாரர்.*

*கொழும்பு, வாணிப உயர் நீதிமன்றத்தினால் மேற்படி கம்பனியை முடிவுறுத்துவதற்காக ராஜகிரிய, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, இல. 100/1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் ராஜகிரிய, நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தானத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஓஎல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனத்தினால் 2019, ஓகத்து 08 ஆந் திகதி விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பம் 2019, நவெம்பர் 18 ஆந் திகதி நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கு பணிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின் மீது தீர்ப்பு வழங்கப்படுவதை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன்வழங்கிகள் அல்லது பங்களிப்பாளர் அந்நோக்கத்திற்காக விசாரணை செய்யப்படும் நேரத்தில் நேரடியாகவோ அல்லது அவரின் ஆலோசனை சட்டவாதியின் மூலமாகவோ ஆஜராகலாம். அதற்குரிய கட்டணத்தை செலுத்துவதன்*

மூலம் முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக்கொள்ள நாடும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன்வழங்கிகள் அல்லது பங்களிப்பாளருக்கு கீழ் கையொப்பமிடுபவரினால் பிரதியொன்று வழங்கப்படும்.

ஸ்ரீமாள் பொன்னம்பெரும,
இல. 22, ஷெடி குரூவ் எவனியூ,
கொழும்பு 08.

**குறிப்பு**.- மேற்படி விண்ணப்பத்தின் மீதான விசாரணையின் போது ஆஜராகியிருக்க நாடும் எந்நபரும் அவ்வாறு செய்வதற்கான தனது விருப்பத்தின் எழுத்துமூலமான அறிவித்தலை மேல் பெயர் குறிப்பிடப்பட்ட ஸ்ரீமாள் பொன்னம்பெருமவுக்கு சமர்ப்பிக்கவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்க வேண்டும். அறிவித்தலில் அந்நபரின் பெயரும் விலாசமும், ஸ்தாபனமொன்றாயின் அதன் பெயரும் விலாசமும் குறிப்பிடப்பட வேண்டியதோடு அந்நபரினால் அல்லது ஸ்தாபனத்தினால் அல்லது அவரின் அல்லது ஸ்தாபனத்தின் (இருப்பின்) சட்டவாதியினால் கையொப்பமிடப்பட்டு மேல் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2019, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி பின்னேரம் 6 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்க வேண்டும்.

ஸ்ரீமாள் பொன்னம்பெரும,
இல. 22, ஷெடி குரூவ் எவனியூ,
கொழும்பு 08.

10-391

---

## 1971 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை மனநலம் குன்றியோருக்கான சங்க சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

வேலுக்குமாராகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், 1971 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க "இலங்கை மனநலம் குன்றியோருக்கான சங்கம் (சி.ஏ.எம்.ஆர்/CAMR) சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்சங்கத்தின் பெயரை "புலமைசார் குறைபாடுடையோருக்கான சங்கம் - இலங்கை (ஏ ஐ டி எஸ் எல்/AIDSL) என மாற்றுவதும் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தின் ஒப்புதலுடன் திருத்துவதும் நோக்கமாகும்.

வேலுக்குமார்,
பாராளுமன்ற உறுப்பினர்,
கண்டி மாவட்டம்.

10-392